மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதில், நாற்றம் அடிக்கிறது, அதைப் போக்க வேண்டும் என்று சொல்வது அவசர முக்கியத்துவம் இருக்கிறது என்பதை ஒத்துக் கொள்கிறேன். வேறு இருக்கின்ற விஷயங்களைப் பற்றி மானியக் கோரிக்கை வரும்போது பேசலாம். உறுப்பினர் அவர்கள் 6-வது மாடியில் இருந்து கொண்டு நாற்றம் அடிப்பதைப் பற்றிச் சொல்லுகிறார். நான் பக்கத்திலேயே இருந்து கொண்டு அனுபவிக்கிறேன்....

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூர், வாணியம்பாடி போன்ற பகுதிகளில் இருக்கின்ற தொழிற்சாலைகளிலிருந்து வருகின்ற நாற்றத்தை எல்லாம் சகித்துக் கொண்டு வருகின்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த நாற்றத்தையும் சகித்துக் கொள்ள வேண்டும் என்று நான் வாதாடவில்லை. இந்த நிலைமையைப் போக்குவதற்கு அரசு உரிய முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

(5) அறிவிப்புகள்.

(அ) பேரவையின் அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

1978 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 2ஆம் தேதியன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்துள்ள முடிவுப்படி பேரவையின் அலுவல்கள் பற்றிய விவரம்:

1978–79ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்.

(திரு. கூத்தக்குடி ச. சண்முகம் எழுந்தார்)........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஏற்கனவே என் அறிவிப்பை வாசிக்கத் தொடங்கி விட்டேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கேள்வியைப் பின்னால் எழுப்பலாம்.

| | | | |
|---|---|---|---|
| 3—3—1978 வெள்ளிக்கிழமை; 4—3—1978 சனிக்கிழமை | 17 | கல்வி. | |
| 5—3—1978 ஞாயிற்றுக்கிழமை | | விடுமுறை. | |
| 6—3—1978 திங்கட்கிழமை | 26 | கைத்தறியும், நெசவுத் தொழிலும். | |
| | 27 | கதர். | |
| 7—3—1978 செவ்வாய்க்கிழமை | 22 | கால்நடை வளர்ப்பு | 2 மணி நேரம். |
| | 30 | சமூக நலன். | |
| | 47 | செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல். | 1½ மணி நேரம். |
| 8—3—1978 புதன்கிழமை | 10 | பால் வழங்கு திட்டங்கள். | |
| | 20 | வேளாண்மை. | |
| | 50 | வேளாண்மை குறித்த மூலதனச் செலவு. | |
| 9—3—1978 வியாழக்கிழமை | 29 | தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும். | |
| | 33 | வீட்டுவசதி. | |
| | 49 | பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு. | |
| 10—3—1978 வெள்ளிக்கிழமை | 28 | சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன. | |
| | 34 | நகர்ப் பகுதி மேம்பாடு. | |
| 11—3—1978 சனிக்கிழமை | 36 | பாசனம். | |
| | 37 | பொதுப்பணிகள்—கட்டடங்கள். | |
| | 38 | பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும். | |
| | 52 | பாசனம் குறித்த மூலதனச் செலவு. | |
| | 53 | பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு—கட்டடங்கள். | |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

| | | |
|---|---|---|
| 12— 3— 1978 ஞாயிற்றுக்கிழமை | | விடுமுறை. |
| 13— 3— 1978 திங்கட்கிழமை | 21 | மீனளம். |
| | 35 | நுகர்பொருள் வழங்கல். |
| | 57 | பல்வகை மூலதனச் செலவு. |
| 14— 3— 1978 செவ்வாய்க்கிழமை | 6 | பத்திரப்பதிவு. |
| | 23 | கூட்டுறவு. |
| | 25 | சின்கோனா. |
| | 45 | காட்டுவளத் துறை. |
| | 56 | காட்டுவள மூலதனச் செலவு. |
| 15— 3— 1978 புதன்கிழமை | 15 | காவல் துறை. |
| 16— 3— 1978 வியாழக்கிழமை. | 16 | தீயணைப்புப் பணிகள். |
| 17— 3— 1978 வெள்ளிக்கிழமை | 12 | 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம். |
| 18— 3— 1978 சனிக்கிழமை | 31 | பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன். |
| | 32 | பின்தங்கிய வகுப்பினர் நலன். |
| | 44 | எழுதுபொருள் அச்சுத்துறை. |
| 19— 3— 1978 ஞாயிற்றுக்கிழமை | | விடுமுறை. |
| 20— 3— 1978 திங்கட்கிழமை | 3 | மோட்டார் வண்டிகள் சட்டங்கள்— நிர்வாகம். |
| | 39 | சாலைகளும், பாலங்களும். |
| | 40 | சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து. |
| | 54 | சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு. |
| | 55 | சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. |
| 21— 3— 1978 செவ்வாய்க்கிழமை | 1 | நிலவரித்துறை. |
| | 11 | மாவட்ட நிர்வாகம். |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

| | |
|---|---|
| 22— 3— 1978<br>புதன்கிழமை | 24 தொழில்கள்.<br>51 தொழில் வளர்ச்சி குறித்த மூல தனச் செலவு. |
| 23— 3— 1978<br>வியாழக்கிழமை | (1) 1977–78 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை நிதிநிலை அறிக்கையை அளித்தல்.<br>(2) 1970–71 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை அளித்தல்.<br>(3) 18 மருத்துவம்.<br>19 பொதுச் சுகாதாரம். |
| 24— 3— 1978<br>வெள்ளிக்கிழமை | தூய வெள்ளி— விடுமுறை. |
| 25— 3— 1978<br>சனிக்கிழமை | 7 மாநில சட்டமன்றம்.<br>8 தேர்தல்கள்.<br>9 மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். |
| 26— 3— 1978<br>ஞாயிற்றுக்கிழமை | விடுமுறை. |
| 27— 3— 1978<br>திங்கட்கிழமை | 2 மாநில ஆயத் தீர்வை.<br>4 பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்— நிர்வாகம்.<br>5 முத்திரைத்தாள்கள்— நிர்வாகம்.<br>58 மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும். |
| 28— 3— 1978<br>செவ்வாய்க்கிழமை | 13 நீதி நிர்வாகம்.<br>14 சிறைச்சாலைகள்.<br>41 இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர்தணிப்பு.<br>42 ஒய்வூதியங்களும் ஏனைய ஒய்வு கால நன்மைகளும்.<br>43 பல்வகை.<br>46 இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும்.<br>48 ஜமீன்தார்களுக்கு இழப்பீடு.<br>(41 முதல் 48 வரை: விவாதமின்றி வாக்கெடுப்புக்கு விடப்பெறும்) |

(2) நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு அறிமுகம் (1978–79).

(3) 1977–78 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு அறிமுகம்.

(4) 1970–71 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு அறிமுகம்.

| | |
|---|---|
| 29— 3— 1978 புதன்கிழமை | நிதி ஒதுக்க சட்டமுன்வடிவுகள் மீது விவாதமும் அவற்றை நிறைவேற்றலும். |
| 30— 3— 1978 வியாழக்கிழமை | அரசியலமைப்பு (44-வது திருத்த) சட்டமுன்வடிவிற்கு ஏற்பளிப்பது குறித்த தீர்மானம். |

பேரவை 5—4—1978 வரை கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பேரவையின் மற்ற அலுவல்கள் குறித்து பின்னர் அறிவிக்கப்பெறும்.

பேரவை வழக்கம்போல் காலை 9 மணி முதல் பிற்பகல் 1–30 மணி வரை கூடும்.

(முற்பகல் 10–20)

## 2. தகவல் கோரல்— தொடர்ச்சி.

### (ஆ) புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விவசாயிகளுக்குச் சலுகை குறித்து.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று மதிப்பிற்குரிய நிதியமைச்சர் அவர்கள் வரவு-செலவுத் திட்டத்திற்குப் பதில் அளிக்கிற நேரத்தில் புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அனுவாரியாக விளைச்சல் 37 காசுகள் அதற்குக் கீழே இருந்தால் அவர்களுக்குச் சலுகை அளிக்கக்கூடிய முறையை அறிவித்தார்கள். இன்றைக்கு இந்த அவையில் விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் 25 சதமானம் அதற்குக் குறைவாக விளைச்சல் உள்ள விவசாயிகளுக்குச் சலுகை என்று சொன்னார்கள். நேற்றைய தினம் நிதி அமைச்சர் அவர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS